# யாழ் இந்திய துணைத் தூதரகம்
# யாழ்ப்பாணம்
# ஊடக அறிக்கை

உலகின் முப்பது மில்லியன் மக்களால் பின்பற்றப்படுகின்ற உலக அளவில் ஒழுங்குபடுத்தப்பட்ட மதங்களில் ஐந்தாவது இடத்திலும் அனைத்து மதங்களின் வரிசையில் ஒன்பதாவது இடத்திலும் விளங்குகின்ற சீக்கிய மதமானது இந்தியத் துணைக் கண்டத்தின் வட மேற்கு பகுதியில் கி.பி 15ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் 16ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் தோற்றம் பெற்று வளர்ந்து வந்ததொன்றாகும். இம் மதத்தின் ஸ்தாபகராக விளங்கும் ஸ்ரீ குருநானக் தேவ் அவர்கள் 1469ம் ஆண்டு அவதரித்தார். கவிஞராகவும் மதத்தினை போதிப்பவராகவும் சமூகமாற்ற சிந்தனையாளராகவும் விளங்கிய இவர் கடவுள் ஒருவரே அவர் எங்கும் நிறைந்தவர் எல்லாம் வல்லவர் என்று குறிப்பிடுவதுடன் பிறப்பில் எல்லா மதத்தவர்களும் சமமானவர்களே அவர்கள் இன மத மொழி சாதி நிற ரீதியான வேறுபாடுகளுக்கு எதிராக சமூக நல்லிணகத்துடன் வாழ வேண்டும் என வலியுறுத்துகின்றார். குரு நானக்குடைய ஆன்மீகப் போதனைகளை ஆதாரமாகக் கொண்டே சீக்கிய மதம் வளர தொடங்கியமையால் இவரே இம்மதத்தின் ஆரம்ப கரத்தாவாக விளங்கியதுடன் இவரின் வழியில் தோன்றிய ஏனைய ஒன்பது குருத் தலைவர்களும் தொடர்ந்து சீக்கிய மதத்தினை வழிநடாத்தினர்.

குரு கிரந்த் சாகிப் எனப் பெயரிடப்பட்டு 11வது குருவாக கொள்ளப்படும் நூலினைத் தொடர்ந்து அதுவே சீக்கிய மதத்தின் குரு நூலாகக் கொள்ளப்பட்டதுடன் இன்றுவரை பின்பற்றப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வருடமும் காரத்திகை மாதத்தில் வரும் பௌர்ணமி தினத்தில் குருநானக் தேவின் அவதார தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்தியத் துணைக் கண்டத்தினதும் மேற்கு ஆசியாவின் பல பாககங்களிற்கும் பயணம் செய்த குரு நானக் அவர்கள் தனது பயணக் குறிப்புக்களில் தனது இலங்கை விஜயம் தொடர்பாகக் குறிப்பிட்டுள்ளார். தனது ஆன்மீகப் பயணங்களின் போது இந்து குருமார்களுக்கும், சமணத் துறவிகளுக்கும், இஸ்லாமியர்களுக்கும், பௌத்தர்களுக்கும், பாரசீகர்களுக்கும் பல்வேறு சொற்பொழிவுகளை ஆற்றினார். யாரெல்லாம் சகிப்புத்தன்மையினை கொண்டிருந்தார்களோ யாரெல்லாம் தனது கொள்கையான இறைவன் ஒருவனே என்பதனை வலியுறுத்துகின்றனரோ அவர்களோடு எல்லாம் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். சமத்துவமும், சகோதரத்துவமான அன்பும், நல் ஒழுக்கத்தினையும் அடிப்படையாகக் கொண்ட ஆன்மீக, சமூக, மற்றும் அரசியல் தளம் ஒன்றினை உருவாக்கினார்.

யாழ் இந்தியத் துணைத் தூதரகமானது இவ் மகாகுரு குருநானக்கின் 550வது பிறந்தநாள் நினைவு தினத்தினை கொண்டாடும் முகமாக, 11 நவம்பர் 2019 அன்று தூதரக வளாகமானது வண்ண ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டதுடன் தூதரகத்தில் பொற்கோவில் பற்றியும் இந்தியாவில் சீக்கிய மதம் என்ற தொனிப்பொருளில் இரண்டு ஆவணக் காணொளிகள் காட்சிப்படுத்தப்பட்டது. மேலும் சீக்கிய மதத்தினைப் பற்றிய ஒரு தொகுதி நூல்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் தலைவர் திருமதி சுகந்தினி முரளீதரன் மற்றும் வவுனியா பொது நூலகர் திருமதி பாமினி குருச்சந்திரன் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது. அதன் தொடர்சியாக, 12 நவம்பர் 2019 அன்று சீக்கிய மதத்தின் முக்கிய கொள்கைகளில் ஒன்றான மனிதகுலத்திற்கு சேவை செய்தல் மற்றும் கடவுளுடைய நாமத்தை ஜெபித்தல் ஆகியவற்றினை வெளிப்படுத்தும் வகையில் கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமத்தில் உள்ள 170ற்கும் மேற்பட்ட சிறார்களுக்கும் மதிய விருந்தும் அவர்கள் கலைத்துறையில் தமது திறன்களை வெளிப்படுத்த உதவும் வகையில் இலங்கை ரூபாய் 200,000ற்கும் அதிகமான பெறுமதியுடைய இசைக்கருவிகள் யாழ் இந்தியத் துணைத் தூதரகத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. துணைத் தூதுவர் பாலச்சந்திரன் அவர்கள் தனது உரையில் இந்த நாளின் முக்கியத்துவத்தினைப் பற்றி எடுத்துரைத்தார். இல்லத்தின் தலைவர் நித்தியானந்தம் அவர்கள் இந்தியாவிற்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி அவர்கள் கடந்த 9 நவம்பர் 2019 அன்று சீக்கிய மத பக்தர்களுக்காக கர்த்தார்ப்பூர் பாதையினைத் திறந்து வைத்ததன் தொடர்ச்சியாக இந் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

*12 நவம்பர், 2019.*